TAMIL NADU LEGISLATURE LIBRARY
16 சன 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1977, ஆகஸ்டு 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர், வேலூர்.

'7வினா :—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1975-76-ல் வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவர் மீது அறிஞர் அண்ணா அவர்களின் சிலை வைப்பதற்கு டிக்கட் போட்டு முறைகேடாக வசூல் செய்தார் என்பதைப் பற்றி அரசாங்கத்திற்குப் புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :—(அ) ஆம். இது பற்றி தனி விசாரணைக் குழு அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

(இ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் மேற்கொண்டு புலனாய்வுக்கும், குற்றவாளிகளின்மீது வழக்குத் தொடரவும் காவல் துறையிடம் இதை ஒப்படைத்தார். இது சம்பந்தமாக வங்கியின் முன்னாள் தலைவர் மற்றும் 8 நபர்கள் மீதான புகார் காவல் துறை வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்ற புலனாய்வுத் துறையிடம் தாக்கல் செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இந்த அறிஞர் அண்ணா அவர்கள் சிலைக்கு எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக ரூ. 5, 10, 15, 20, 25, 50 ஆகிய கட்டணங்களுக்கு ரசீது அச்சடித்து ஏறக்குறைய $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஒழுங்கான கணக்குகள் இன்னும் வந்து சேரவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஏற்கெனவே அரசுக்கு இது தெரிந்து அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா? என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. க. உரொ எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே 1965 ஆம் ஆண்டே, அப்போது இருந்த அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இதிலே வங்கிகளுடைய சிப்பந்திகள் எத்தனை பேர் ஈடுபட்டிருக்கிறார்கள்? அவர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மத்திய கூட்டுறவு வங்கியினுடைய அலுவலர்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. ஆனால் யார், யார் எவ்வளவு பேர்கள் என்கிற புள்ளி விவரம் தெரியவில்லை. அது பற்றியும் புலனாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : கூட்டுறவுத் துறைகளை உபயோகப் படுத்தி இப்படி பல்வேறு விதமான வசூல்களில் ஈடுபடுகிற போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அரசு இனி மேலாவது உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற அரசு அதில் கவனமாக இருக்கிறது. மாவட்ட அதிகாரிகளுக்கு அது பற்றி கண்டிப்பான உத்திரவுகளை அரசு பிறப்பித்திருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : அந்த வங்கியின் தலைவர் எத்தனை ஆண்டுகள் பதவியில் இருந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய தலைவர் பெயர் எம். வி. வடிவேலு என்பதாகும். அவர்கள் எத்தனை ஆண்டுகள் பதவியில் இருந்தார்கள் என்பது குறிப்பில் இல்லை. இந்தக் குற்றச்சாட்டு அரசின் கவனத்திற்கு வந்தபின், அவர் அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

திரு. மு. அம்பிகாபதி : அந்த வங்கியின் தலைவர் மீது தற்சமயம் வழக்கு ஏதாவது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? அதன் நிமித்தம் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

1977 ஆகஸ்டு 2]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அந்த வங்கியில் தலைவர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. கைது செய்யப்பட்டிருக்கிறாரா என்பதற்கான குறிப்புகள் என்னிடத்தில் இல்லை.

குறுகிய கால கடன்களுக்கான கால வரம்பு.

*8 வினு—திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா?

கூட்டுறவுச் சங்கங்களின் வழியாக நெற்பயிர்செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறுகிய கால கடன்களுக்கான கால வரம்பினை ஓராண்டாக உயர்த்தும் செயற் குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இல்லை.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, நெற்பயிருக்கு மட்டும் குறுகிய காலக் கடன் 6 மாதங்களுக்கு நாம் கொடுக்கிறோம். அதனுல் நெற்பயிர் சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கு பல இடர்கள் இருக்கின்றன. காரணம் சில நேரங்களில் கடன் கேட்டு, காலங்கடந்து கிடைக்கிறது. ஒரு மாதம் 2 மாதம் காலம் கடந்துவிட்டால், நான்கைந்து மாதம் ஆனவுடன் திரும்பச் செலுத்த வேண்டியிருப்பதனுல், நெற்பயிருக்கு மட்டும் குறுகிய காலக் கடனுக்கான வரம்பினை ஓராண்டாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மூன்று மாத காலத்திற்குள்ளாக வசூலிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது சரியல்ல. அறுவடைக்குப்பின் இரண்டு மாதங்கள் கழித்துத்தான் வசூல் செய்யப்படுகிறது. குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் அவகாசம் தரப்படுகிறது.

திரு. சி. கோவிந்தராஜன்: நெல் பயிரிடக்கூடிய விவசாயிகளுக்கு சில சமயங்களில் சாவியாகப் போகக்கூடிய காரணத்தால் கடன்களைக் காலாகாலத்தில் கொடுக்க முடியவில்லை. வேறு சில கடன்களைக் கன்வர்ட் பண்ணி அவர்களுக்கு நீண்ட காலத் தவணையாக மாற்ற முடியும். அப்படிப்பட்ட நிலை இல்லாததால் அவர்கள் கடன்களைத் திருப்பிக் கட்டாததால் அந்தப் பிரதேசம் முழுவதுமே சொசைட்டி கடன் கொடுக்கப்படாத நிலைமை இருப்பதாகத் தகவல் வந்துள்ளது. அந்த அடிப்படையில் அந்தக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக, குறைந்த பட்சம் ஓராண்டுக் காலமாவது நிர்ணயிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா?